## பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த...

ஒருவன் எந்தவொரு சொல்லையும், அதனைக் குறித்து வைத்துப் பாதுகாக்கத் தயாராக உள்ள ஒரு கண்காணிப்பாளர் அவன் அருகில் இல்லாமல் மொழிவ தில்லை.
(அல்குர்ஆன்: 50:12)

இந்த உலகத்தில் ஒரு கெட்ட பழக்கமும் இல்லாத ஒரு மனுசன பார்க்கவே முடியல என்று அலுத்துக் கொண்டார் ஒரு பெரியவர். அவர் பக்கத்தில் நின்ற ஓர் இளைஞன். பொதுவாக அப்படிச் சொல்லாதீங்க பெரியவரே என்று மறுத்தான். முடிந்தால் அப்படி ஒருவனைக் காட்டு என்றார் பெரியவர். ஏன் நான் இல்லையா என்றான் இளைஞன்.

பொய்
ஒரு வாளின்
வெட்டு
போன்றது
காயம்
ஆறிவிடலாம்
அதன் வடு
மாறாது

அதற்கு அப்பெரியவர் நீ சிகரெட் பிடிப்பியா என்றார். நோ சொல்லி மறுத்தான் அவன். மதுப்பழக்கம் உண்டா என்றார் அவர். மருந்துக்கும் இல்லை என்றான் அவன். பொம்பளத்தொடர்பு எதுவும் உண்டா என்று இழுத்தார் பெரியவர்.. மனதால் கூட தொட்ட தில்லை என்றான் அவன். அதிசயித்த பெரியவர் தம்பி நீதான் மகாத்மா என்றார் புளகாங்கிதத்துடன். அவசரப்பட்டு முடிவெடுத்துவிட வேண்டாம் பெரியவரே, என்னிடம் ஒரு சின்ன வீக்னஸ் உண்டு என்றான் அவன். என்ன அது என்றார் அவர். பொய்மட்டும் சொல்வேன் என்றான் அவன் அசால்டாக.

அந்த அளவுக்கு பொய் இன்று சர்வசாதாரண ஒன்றாகிப் போனது உலகில். ஏதோ பணத்தை சில்லரையாக மாற்றி செலவு செய்வது போல அன்றாடம் மனிதர்கள் பொய்களைச் செலவு செய்தபடி இருக்கிறார்கள். பொய்யைக் குழந்தைகள் விளையாட்டுப் பொருள் போல பயன்படுத்துகிறார்கள் என்றால் பெரியவர்கள் உணவுப் பொருளைப் போல பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பொய்என்பது குற்றம் என்பது போய் திறமை என்று உருமாறிப் போனது. பொய் சொல்லலாம். ஆனால் அதை பொருந்தச் சொல்லவேண்டும் என்ற லெவலுக்கு வந்து விட்டது. திருமணம் ஆயிரம் காலத்துப் பயிர் என்ற பழமொழி யைச் சொல்லிக் கொண்டு ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணம் நடத்திவைக்கப்படுகிறது. அந்தரங்கத்தில் லட்சக்கணக்கில் மாப்பிள்ளை வரதட்சனை வாங்கியிருக்க ஒரு நயா பைசா கூட மஹராக எதுவும் தராதிருக்க இத்தனை ஆயிரம் ரூபாய் மஹருக்கு இன்னாரை உனக்குத் திருமணம் முடித்து வைக்கிறேன் என்று பாவப்பட்ட ஆலிம்சாக் களையே அதுவும் இறையில்லத்திலேயே வைத்து பொய் சொல்ல வைத்துவிடுகிற விபரீத உலகம் இது.

நம் எல்லோருக்கும் தெரிந்த ஆரம்ப பாடசாலை நூலில் உள்ள ஒரு கதை இது. பாட்டி வடை சுட்டுக் கொண்டிருந்தாள். அவள் அசந்திருந்த நேரம் பார்த்து ஒரு காகம் வடையைத் திருடிக் கொண்டு பறந்தது. அது மரக்கிளையில் உட்கார்ந்து வடையைத் தின்னப்போகும் போது நரி ஒன்று இதைப்

பார்த்தது. உடனே அந்த நரி காக்கையே! நீ மிக இனிமையாகப் பாடுவியாமே, எங்கே ஒரு பாட்டுப்பாடேன் என்று கேட்டது. முகஸ்துதியால் புல்லரித்துப்போன காக்கை பாடுவதற்கு வாயைத் திறக்க வடை கீழே விழுகிறது. நரி அதை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டது.

நீ ஒருவனை ஏமாற்றினால் இன்னொருவன் உன்னை ஏமாற்றுவான் என்ற நீதி இக்கதையில் இருப்பது உண்மை தான் இருந்தாலும் ஏமாற்றிய நரிக்கு வடை கிடைத்து விட்டதே அதனிடமிருந்து வடையை யாரும் பறிக்கவில்லையே. இந்தக் கோணத்தில் இந்தக்கதையை நாம் என்றைக் காவது யோசித்தோமா..

இப்படி கல்யாணம் தொடங்கி பாடநூல்வரை எங்கு நோக்கினும் பொய் ஏமாற்று இவற்றைத்தான் நாம் காண முடிகிறது. நம் எல்லோருக்கும் தெரிந்த தமிழ்ப்பாட்டு ஒன்று, பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த புலவர் பெருமானே, இப்பாட்டுக்கு ஒப்ப நம் வாழ்வு முழுவதுமே பொய்யும் ஏமாற்றுகளுமாக காட்சியளிக்க ஏமாற்றுவதற்காகவே ஏப்ரல் ஃபூல் என்ற ஒரு நாளை வேறு நாம் கண்டுபிடித்து வைத்திருப்பதுதான் கொடுமையிலும் கொடுமை. இந்தச் சூழ்நிலையில் இந்தப் பொய் ஏமாற்று பற்றி இஸ்லாம் என்ன கூறுகின்றது என்பதை இந்தவார வெள்ளிமேடையில் கொஞ்சம் விரிவாக அலசுவோமா..?

ஒரு முஸ்லிம் கோழையாக இருக்கலாமா?. என நபி(ஸல்) அவர்களிடம் வினவப்பட்டது. இருக்கலாம் என்றார்கள். கஞ்சனாக இருக்கலாமா.. என மீண்டும் வினவப்பட்டது ஒ இருக்க லாமே. என்றார்கள். பொய்யனாக இருக்கலாமா என மூன்றாம் முறை வினவப்பட்டபோது கண்டிப்பாக இருக்க முடியாது, இருக்கக்கூடாது என மறுத்துரைத்தார்கள்.

ஓர் இறை நம்பிக்கையாளனின் உள்ளத்தில் எப்படி இறைநம்பிக்கையும் இறைநிராகரிப்பும் ஒன்று சேர இயலாதோ அதுபோல உண்மையும் பொய்யும் ஒருபோதும் ஒன்றுசேர இயலாது எனபதும் நபிமொழியே. முகப்பில் உள்ள கதையில் என்னிடம் எந்தக் கெட்ட பழக்கமும் இல்லை என்று சொன்னவன் இறுதியில் பொய் மட்டும் சொல்வேன் என்று சொல்லி தன் மதிப்பைக் கீழே போட்டு உடைத்துவிட்டான். ஆனால் மேற்கண்ட நபி மொழியில் ஒரு முஸ்லிம் கோழையாகக் கூட இருக்கலாம் கஞ்சப்பிரபுவாகக்கூட இருக்கலாம். ஆனால் பொய்யன் என்ற டிப்ளோமாவை மட்டும் வாங்கிவிடக்கூடாது என்ற நபி (ஸல்) அவர்களின் கண்டிப்பிலிருந்தே பொய்யின் விபரீதத்தை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

ஒருவன் பொய் சொன்னான் என்ற செய்தி நபி (ஸல்) அவர்களுக்குத் தெரியவந்து அவன் அதற்காக வருந்தி இறைவனிடம் பாவமன்னிப்புத் தேடிவிட்டான் என்று கேள்விப்படும்வரை நபி(ஸல்) அவர்கள் அவனுக்குரிய மரியாதையைக் காற்றில் வீசிவிடுவார்கள் என்று அன்னை ஆயிஷா (ரளி) அறிவிக்கும் நபிமொழி அஹ்மதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இமாம் புகாரீ (ரஹ்) அவர்கள் ஒரு நபிமொழியைக் கேள்விப்பட்டு அதைத் தன் நூலில் இணைக்கும் முகமாக அறிஞர் ஒருவரைச் சந்திக்கச் செல்கின்றார்கள். அப்போது அந்த அறிஞர்,தன் குதிரையை தன்கையில் தீவணம் இருப்பது போல மறைத்துக்கொண்டு அதைத் தன் வசப்படுத்த முயன்று கொண்டிருக்கிறார். இமாம் புகாரீ (ரஹ்) அவர்கள் அந்த அறிஞரிடம் அந்தக் குதிரைக்கான தீவனமாக உங்கள் கையில் கோதுமை போன்ற ஏதாவதொன்று இருக்கிறதா என்று வினவுகிறார்கள். அவர் இல்லை என்பதாக பதில் அளிக்கிறார். உடனே இமாம் அவர்கள், ஒரு மிருகத்தை பொய் சொல்லி ஏமாற்றித் தன் வசப்படுத்தும் உம்மிடமிருந்து நான் எந்தவொரு செய்தியையும் பெற்று அதை என்நூலில் இணைக்கமாட்டேன் எனக் கோபமாகக் கூறிவிட்டு அங்கிருந்து கிளம்பி வந்துவிட்டதாகவும் ஒரு நிகழ்வு உண்டு.

பொய் அவ்வளவு கொடுமையானது. செத்தபின்பும் கொட்டும் குளவி போல ஒரு பொய் அழிக்கப்பட்டு இல்லாம லாகிய பின்பும் சில நேரங்களில் கொட்டிக்கொண்டிருக்கும் என்றான் ஓர் அறிஞன். இதையே பொய் சொல்வது ஒரு வாளின் வெட்டு போன்றது. காயம் ஆறிவிடலாம். ஆனால் அதன் வடு மாறாது என்று சொன்னார் அறிஞர் சஅதி. பொய்கள் உண்மைகளுடன் முரண்படுவது மாத்திரமல்ல தங்களுக்குள்ளேயே அவை சண்டைகளை உருவாக்கி விட வல்லமை பெற்றவை. (இஸ்லாமிய அமைப்புகளின் மேடை மீடியா வழிச்சண்டைகள் இதற்கு நல்ல உதாரணங்கள்.

பொய்யை சாதாரணமானது என்று மனிதன் எண்ணுகின் றான். ஆனால் ஒரு பொய்யை நிலைநிறுத்த ஒரு நூறு பொய் களைப் புனைய வேண்டிய கட்டாயத்திற்கு அவனைப் பொய் இட்டுச் சென்றுவிடுகின்றது. ஒரு பொய்யன் அப்பொய்யை எவ்வளவு தூரத்திற்கு பரப்புகின்றானோ அவ்வளவு தூர அளவிற்கு பாவத்தை வளர்த்து விடுகின்றான்.

ஒரு பத்திரிக்கையாளன் பொய்யான செய்திகளைத் தருவ தால் ஏற்படுகிற பிரச்சினைகள், ஒரு அரசியல்வாதி மக்கள் பிரச்சினையை உருமாற்றிக் கூறுவதால் ஏற்படுகிற கொந்தளிப் புகள், ஒரு சுயநலவாதி நல்ல மனிதன் மீது கற்பிக்கிற களங்கத்தால் ஏற்படுகிற இழப்புகள், ஒரு கயவன் நல்லபெண் மீது கூறுகிற அவதூறால் உண்டாகிற அசிங்கங்கள் இவை யெல்லாம் பொய்யால் விளைகிற விபரீத விளைவுகளுக்கான சான்றுகள்.இதனால்தான் நம் வாழ்வின் எல்லா வாசல்களி லிருந்தும் வெளிக்கிளம்புகிற பொய்களை அடையாளம் கண்டு அவ்வப்போது தன் வாக்காலும் வாழ்வியலாலும் நபி (ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள். அவற்றில் சிலவற்றை இப்போது பார்ப்போம்.

மனதினுள் ஒரு பொருளின் மீது மிகுந்த ஆசை இருக்கும் ஆனால் வெளியே அது வேண்டாம் என்பது போல சிலர் காட்டிக் கொள்வார்கள். இப்படியான பொய் பாவனை யைக் கூட நபி (ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள்.

நபி(ஸல்) அவர்கள் தம் மனைவியருள் ஒருவரின் முதலிரவன்று பாலை அருந்திவிட்டு மீதப்பாலை தம் மனைவிக்கு கொடுக்க, அவர் பசியிருந்தும் தனக்கு அதில் விருப்பமில்லை என மறுக்கிறார். அவர் சும்மா ஒப்புக்குப் பதிலளிக்கின்றார் என்பதைப் புரிந்துகொண்ட நபி (ஸல்) அவர்கள் பசியையும் பொய்யையும் நீ ஒன்று சேர்க்காதே பாலை எடுத்து அருந்து என பணிக்கின்றார்கள்.

நீதிமன்றக் கூண்டில் நின்ற ஒருவனைப் பார்த்து நான் சொல்வதெல்லாம் உண்மை, உண்மையைத் தவிர வேறெதுவும் இல்லை என்று சொல்லுமாறு கூறப்படுகிறது. அவன் மெதுவாக சொன்னவரை நிமிர்ந்து பார்த்துவிட்டு என்னை ஆரம்பத்திலேயே பொய் சொல்லச் சொல்றீங்களே என்றானாம் அவன்.

அந்த அளவுக்கு இன்று நீதிமன்றச் செயல்பாடுகளனைத்தும் பொய்யால் நிரம்பி வழிகின்றன. வழக்கறிஞரின் பொய்யான வாதத்திறமையாலும் பொய் சாட்சிகளாலும் குற்றவாளிகள் நிரபராதிகளாகவும் நிரபராதிகள் குற்றவாளிகளாகவும் ஆக்கப்படும் கொடுமையை அன்றாம் நாம் கண்டு வருகிறோம். இப்படியான தில்லுமுல்லு செய்யும் வழக்கறிஞர் களையும் பொய்சாட்சியாளர்களையும் இஸ்லாம் வன்மை யாகக் கண்டிக்கிறது. ஒருவன் குற்றவாளி, அநியாயக்காரன் என்று நன்றாகத் தெரிந்திருந்தும் அவனுக்காக வாதாடுபவன், உதவி செய்பவன் இஸ்லாத்தை விட்டும் வெளியேறி விட்டான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இஸ்லாத்தில் பெரும்பாவங்கள் எவை என நபி(ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது. இறைவனுக்கு இணை கற்பிப்பது, பெற்றோரை நோவினை செய்வது, பொய்சாட்சி கூறுவது என அவர்கள் பதிலளித்தார்கள்.

இல்லாத ஒன்றை தன்னிடம் இருப்பதாக சிலர் காட்டிக்கொள்ள முயல்வர். அதில் அல்ப சந்தோஷம்

அவர்களுக்கு. அது மாதிரியான செயல்பாடுகளையும் இஸ்லாம் கூடாது என்கிறது.

ஒருபெண் நபி(ஸல்) அவர்களிடம் வந்து இறைத்தூதர் அவர்களே! எனக்கொரு சக்களத்தி இருக்கிறாள். அவளை விட என் கணவர் என் மீது அதிக அக்கறை கொண்டவர் என்பதைக் காட்டுவதற்காக கணவரின் வருமானம் அல்லாத என் தனிப்பட்ட வருமானத்தின் மூலம் அழகான ஆடைகள் வாங்கி அவற்றை அணிந்துகொண்டு அந்தச் சக்களத்தி முன்னால் தோன்றி இவையெல்லாம் என் கணவர் எனக்கு எக்ஸ்ட்ராவாக தந்தவை என்ற தோரணையில் சொல்லி நான் நடந்து கொள்ளலாமா..? என்று கேட்டார். கூடாது என்று கண்டித்த நபி(ஸல்) அவர்கள் கிடைக்காத ஒன்றை கிடைத்ததாகச் சொல்லி உண்மைக்கு மாற்றமாக நடக்க முற்படுபவள் பொய்யான ஆடை அணிந்தவள் போன்றவள் என்றும் உவமை நயத்துடன் கூறினார்கள். (அஸ்மா(ரளி), புகாரீ)

குறையுள்ள வியாபாரப் பொருட்களில் லேபிளை ஒட்டிச் சரிசெய்வது, அவற்றை அடிப்பாகத்தில் போட்டு மறைப்பது, காலாவதியான பொருள்களின் தேதியை மாற்றிவிடுவது, இதல்லாமல் வாடிக்கையாளர்களின் கண்ணிலேயே பொருட்களைக் காட்டாமல் மறைத்துவிடுவது என வியாபாரத்தில் பல பித்தலாட்டங்கள் இன்று நடக்கின்றன. அழுகிய பொருளை அழகுபடுத்தி ஷோகேசில் வைத்து ஏமாந்தவர்களின் தலையில் கட்டி காசு பண்ணும் கண்றாவிகள் எல்லாம் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

இவற்றைக் கண்டிக்கும் விதமாக, தன் சரக்கில் உள்ள குறைநிறையைக் குறிப்பிடாது மக்களை ஏமாற்றி விற்பனை செய்பவன் சமூகக் குற்றவாளி என்று நபி(ஸல்) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். வாடிக்கையாளர், வியாபாரி இருவருமே தங்களின் கொடுக்கல் வாங்கலில் உண்மை பேசி நாணயத்தோடு நடந்து கொள்ளும் வரை இறைவளம் அவர்களுக்கு வழங்கப்படும். அவ்வாறில்லாத போது இறைவளம் இல்லாமலாக்கப்பட்டுப்போகும் என்று குறிப்பிடுகின்றார்கள். (ஹகீம், இப்னு ஹிஸாம், (ரளி) புகாரி)

உன் வாடிக்கையாளன், நீ சொன்னதை உண்மை என்று நம்பிக்கொண்டிருக்க நீ சொன்னது பொய்யாக இருந்தால் இதை விட அயோக்கியத்தனம் வேறு என்னவாக இருக்கமுடியும் என்று கடிந்துள்ளார்கள் (சுஃப்யான் இப்னு அஸீத் ஹள்ரமீ (ரளி) அபூதாவூது)

சொற்பொழிவாளர்களில் பலர் மக்களின் ரசனைக்காக தங்களுடைய உரைகளில் கற்பனையான நகைச்சுவைகளை இழையோட விடுவர். இவ்வாறானபோக்கை தவறென்று சொல்பவர்களும் நினைப்பதில்லை. கேட்பவர்களும் நினைப் பதில்லை. பேசுவது; வேடிக்கைக்காக, இதில் கற்பனைகளை அவிழ்த்து விடுவதில் என்ன தவறு... என்று வியாக்கியானம் பேசுபவர்களும் உண்டு.

இஸ்லாத்தைப் பொறுத்தவரை, நகைச்சுவை வேடிக்கைகளை வேண்டாம் என்று ஒதுக்கச் சொல்லவில்லை. அது மாதிரியான நகைச்சுவைக்காட்சிகள் நபிகளின் வாழ்வை அலங்கரிப்பதை நபிமொழி நூல்களில் நாம் நிறையவே காண முடிகிறது. ஆனால் அந்த வேடிக்கையும், விகடமும் நேர்மையின் எல்லைக்குள் இருக்க வேண்டும் என்று இஸ்லாம் ஒருவரைமுறை விதிக்கிறது. மக்களை சிரிக்க வைக்கும் எண்ணத்தில் பொய்யான கற்பனைகளை கலந்து உரை நிகழ்த்துபவன் மீது இறை அழிவு உண்டாகட்டும் என்று நபி (ஸல்) சபித்துள்ளது இங்கே நம் கவனத்திற்கு வர வேண்டும். (பஹ்ஸ் இப்னு ஹாகீம் (ரளி) திர்மதீ.)

தேர்தல் காலங்களில் மக்களை ஏமாற்றி ஓட்டுக்களை பொறுக்குவதற்காக அரசியல்வாதிகள் ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவோம். தண்ணீரே இல்லாத ஊரில் நதிகளை உருவாக்கி அவற்றில் படகுச் சவாரிக்கு ஏற்பாடு செய்வோம் என சர்வசாதாரணமாக வாக்குறுதிகளை அள்ளிவீசுவார்கள். இவ்வாறு வாக்குறுதிகளை ஏராளமாகவும் தாராளமாகவும் அள்ளிவீசிவிட்டு அவற்றை நிறைவேற்றும் எண்ணம் சிறிதும்

இல்லாத போக்கை குறிப்பிட "தேர்தல் கால வாக்குறுதிகள்" என்று கூறும் சொல்லாடலே உருவாகிப்போனது. அரசியல் வாதிகள் அல்லாமல் சாதாரண நம்மைப் போன்றோர் கூட சிலருக்கு சிலநேரங்களில் சில வாக்குறுதிகளைத் தந்துவிட்டு அவற்றை நிறைவேற்றாமல் ஏமாற்றி விடுவதையும் பார்க்கின்றோம்.

இவ்வாறான ஏமாற்றுதலையும் இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது. "ஒருவன் எந்தவொரு சொல்லையும் அதனைக் குறித்துவைத்து பாதுகாக்கத் தயாராக உள்ள கண்காணிப் பாளர் அவன் அருகில் இல்லாமல் மொழிவதில்லை" *(50:18)* என்று குர்ஆன் குறிப்பிடுகின்றது. பேசினால் பொய், வாக்களித்தால் மாற்றம், நம்பினால் மோசடி இம்மூன்று அடையாளங்கள் உள்ளவன் முனாஃபிக் (நயவஞ்சகன்) என்றார்கள் நபி (ஸல்) அவர்கள்.

ஒருவனிடம் அவனுடைய மகன் சைக்கிள் வாங்கிக் கேட்கிறான். இதோ வாங்கித்தாரேன் அதோ வாங்கித் தாரேன் என்று ஏமாற்றிக் கொண்டே செல்ல, ஒருநாள் அப்பா, எனக்கு எப்பத்தான் சைக்கிள் வாங்கித் தருவ...? என்று விடாப் பிடியாக மகன் வேண்ட, நீ வளர்ந்ததும் வாங்கித்தர்றேன் என்று தந்தை சொல்ல, ஏன் இப்ப வாங்கித்தந்தா என்ன என்று மகன் எதிர்கேள்வி கேட்க, நீ சைக்கிள் உயரம் கூட வளரல... அதுக்குள்ள நீ சைக்கிள் ஓட்டலாமா...? என்று லாஜிக்காக பேசி சமாளித்துவிட்டதாக தந்தை நினைக்க, அந்த நினைப்பில் மண் அள்ளிப்போடுகிற மாதிரி, ஏம்ப்பா, ரெயில் ஓட்டுறாரே அவரு என்ன ரயில் நீளமா இருக்குறாரு என்று மகன் சொல்ல, தந்தை கப்சிப் ஆனதாக ஒரு கதை உண்டு.

இப்படி சில பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளைச் சமாளிக்க சிலநேரங்களில் அதை வாங்கித் தருகிறேன் இதை வாங்கித் தருகிறேன் என்று பொய் சொல்லி ஏமாற்றுவார்கள். இவ்வாறான ஏமாற்றுதலையும் இஸ்லாம் கண்டிக்கிறது. அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரளி) என்ற நபித்தோழர் தன் குழந்தைப் பருவ நிகழ்வொன்றை இப்படி குறிப்பிடுகின்றார்

ஒருமுறை என் தாயார் என்னை அழைத்து உனக்கொன்று தரப்போகிறேன் என்று கூறினார். அப்போது அங்கிருந்த நபி(ஸல்)அவர்கள், என்ன தருவதாக உத்தேசம் என என் தாயாரிடம் கேட்க, பேரீத்தம்பழம் என்று அவர் பதிலளித் தார். உடனே நபி(ஸல்) அவர்கள், நீ குறிப்பிட்ட அப்பழத்தை உன்மகனுக்கு கொடுத்துவிட்டால் பிரச்சனை ஒன்றுமில்லை. ஆனால் அவ்வாறு நீ கொடுக்காவிட்டால், உன் பதிவேட்டில் ஒரு பொய் பதிவு செய்யப்பட்டுவிடும் என்று அறிவு றுத்தினார்கள். (அபூதாவூது)

இப்படியாக நம் வாழ்வின் எல்லாக்காலகட்டங்களிலும் எந்தச்சூழ்நிலையிலும் யாரையும் ஏமாற்றாமல் வாழப்பழக வேண்டும். ஏன் தெரியுமா...? இவர் அல்அமீன் நம்பிக்கை யாளர், பொய் சொல்லமாட்டர் ஏமாற்றமாட்டார் என்ற அண்ணல் நபியின் மீது இருந்த அந்த நம்பிக்கைதான் இந்த உலகம் முழுவதும் இஸ்லாம் பரவக் காரணமாக அமைந்தது.

இறைநேசர்களின் தலைவர் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களிடம் சிறுவயதில் இருந்த பொய் சொல்லாமை என்ற பண்பு தான் ஒரு கொள்ளைக் கூட்ட தலைவனின் வாழ்வையே மாற்றி அமைத்தது. ஒருமுறை நாம் பொய்யன் என்பது நிரூபணமாகிவிட்டால், அடுத்து நாம் மெய் சொன்னாலும் நம்பமாட்டார்கள். புலிவருது புலி வருது என்று மக்களை பொய் சொல்லி இரண்டு நாள் ஏமாற்றியவன் மூன்றாவது நாள் உண்மையிலேயே புலி வந்து அந்தப் புலிக்கிரையான கதை நமக்குத் தெரிந்தது தானே...!

பொய் சொல்லி வாழ்ந்தவனும் இல்லை. மெய் சொல்லிக் கெட்டவனும் இல்லை என்பது தமிழ்ப் பழமொழி. ஹகீம் என்ற ஓர் அறிஞர் இப்படிக் கூறுவார். உண்மைக்கு உருவம் வழங்கப்பட்டால் அது சிங்கமாகத் தோன்றும். பொய்மைக்கு உருவம் வழங்கப்பட்டால் அது குள்ள நரியாக காட்சிதரும். நீங்கள் சிங்கமா... நரியா என்பதை உங்களின் ஏப்ரல் 1ம் தேதி நடவடிக்கை முடிவு செய்யும் இன்ஷாஅல்லாஹ். ●